# லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் 2 ஆவது கொள்கை மன்றத்தின் விவாதம்: "உலகளாவிய கண்ணோட்டத்தில் இஸ்ரேல்- பாலஸ்தீன மோதலும் அதன் விளைவுகளும்"

"உலகளாவிய கண்ணோட்டத்தில் இஸ்ரேல்- பாலஸ்தீன மோதலும் அதன் விளைவுகளும்" என்ற தலைப்பில், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் இரண்டாவது கொள்கை மன்ற விவாதம், 15 நவம்பர் 2023, புதன்கிழமையன்று, அந்நிறுவனத்தின் 'லைட்ஹவுஸ்' கலையரங்கத்தில் இடம்பெற்றது. லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் காலாண்டுக்கொரு தடவை இடம்பெறும் இந்த வெளிநாட்டுக் கொள்கை மன்றமானது; இலங்கையினதும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியத்தினதும் நடப்பு வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றி ஆராய்வதற்கு, பல்வேறு பின்னணிகளைக் கொண்ட நிபுணர்களை ஒன்றிணைக்கிறது. மிக அண்மையில் இடம்பெற்ற கருத்துக்களமானது, காஸாவின் தற்போதைய நிகழ்வுகளை மையமாகக் கொண்டு, தொடரும் இஸ்ரேல்- பாலஸ்தீன மோதலும் அது அப்பிராந்தியத்திலும் உலகெங்கிலும் ஏற்படுத்தும் தாக்கங்களும் பற்றிய கண்ணோட்டத்தினை விவாதிப்பதற்கானதொரு தளத்தினை வழங்கியது. இந்த கருத்துக்களம் மற்றும் கேள்வி- பதில் அமர்வு; இராஜதந்திர தூதரக பணியக தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், கல்வியாளர்கள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் ஒன்றிணைவதற்கு வழிவகுத்தது.

லக்ஷமன் கதிர்காமர் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் இக்கருத்துக் களத்தினை தொகுத்து வழங்கியவருமான, தூதுவர். ரவிநாத ஆர்யசிங்க அவர்கள், தொடரும் இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல்களின் பின்னணியைத் தொகுத்து வழங்கினார். அக்டோபர் 7 ஆம் திகதியன்று ஹமாஸ் இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், அவர்கள் இஸ்ரேலியர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றமை மற்றும் அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் இன்றுவரை மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் ஆகியவற்றின் காலவரிசையை அவர் விபரித்தார். இந்த மோதல்களின் காரணமாக கொல்லப்பட்டோர், காயமடைந்தோர் மற்றும் இடம்பெயர்ந்தோரின் புள்ளிவிபரங்களை வழங்கிய அவர், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் களத்திலுள்ள மனிதநேய நிறுவனங்கள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்திருந்தபோதிலும், போர்நிறுத்தமேனும் ஏற்படுவதாகத் தெரியவில்லையெனச் சுட்டிக்காட்டினார். போர் ஆரம்பித்து ஐந்து வாரங்கள் கடந்துவிட்ட நிலையில், ஐ.நா பாதுகாப்புச் சபை இதற்கு எதிராகச் செயற்படத்தவறியமை, இப்பிரச்சனை குறித்து ஒரு சிறப்பு அமர்வினைக் கூட்டுவதற்கு மனித உரிமைகள் பேரவையின் இயலாமை மற்றும் அண்மைய வாக்கெடுப்பின்போது உலகளாவிய மனித நேய, மனித உரிமை விதிகளின் பொருத்தப்பாட்டில் ஐ.நா பொதுச்சபை கொண்டுள்ள இருவேறு நிலைப்பாடுகள் போன்றவற்றை அவர் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இது கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால மோதல்களை மதிப்பிடுவதில் ஆழ்ந்த தாக்கத்தைக் கொண்டிருப்பதாக அவர் மேலும் வலியுறுத்தினார்.

விவாதத்தை ஆரம்பித்த வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், கௌரவ தாரக பாலசூரிய, பா.உ, இலங்கை அரசாங்கத்தினதும் நாட்டு மக்களதும் கருத்தினைப் பகிர்ந்துகொண்டார். அக்டோபர் 7ஆம் திகதியன்று ஹமாஸ் இயக்கத்தினர் நடத்திய தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்த இலங்கை அரசாங்கம், தன்னைப் பாதுகாப்பதற்கான

இஸ்ரேலின் உரிமையை அங்கீகரித்ததைக் கோடிட்டுக் காட்டினார். ஆனபோதிலும், இத்தாக்குதல்களுக்கான இஸ்ரேலின் பதிலடிகளின் ஏறுமாறான தன்மைகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதெனவும், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன பிரதேசங்களிலுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்கு, அப்பிராந்தியத்தில் ஒரு போர்நிறுத்தம் வேண்டுமென்ற கோரிக்கைகளுக்கும் அவர் ஆதரவளித்தார். 'விதிகளின் அடிப்படையிலான ஒழுங்குகள்' இல்லாமை குறித்து கவனத்தை ஈர்க்கும் அதேவேளை, சர்வதேச நிறுவனங்கள் இப்பிராந்தியத்தின் அடிப்படைப் பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ளவேண்டிய தேவை உண்டென்பதை அவர் வலியுறுத்தினார்.

கௌரவ இராஜாங்க அமைச்சர் மேலும், அண்மையில் ஐ.நா விற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், 157 இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவளித்து கையொப்பம் இட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். பொதுமக்கள் மட்டத்தில், குறிப்பாக, வளர்ந்துவரும் நாடுகளில் பாலஸ்தீனியர்களுக்கான ஆதரவு பெருகுவதாகத் தெரிவித்த அவர், தமது சுயநலன்களுக்காக இந்த மோதல்களை நீடிக்க விரும்பும் மேற்கு நாடுகளின் நோக்கங்கள் யாதென கேள்வி எழுப்பினார்.

இக்கலந்துரையாடலில் பங்கேற்ற, இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குழுத் தலைவர் திருமதி செவரீன் ஷபாஸ், காஸாவிலுள்ள மனிதாபிமான சூழல் மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிப்பதில் களத்திலுள்ள மனிதநேய நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி விவரித்தார். பொதுமக்களைப் பாதுகாப்பதில் சர்வதேச மனிதநேய சட்டமானது மிகவும் முழுமையானதும் நடைமுறைக்கேற்றதுமான கருவியெனவும், இந்த மோதல்கள் மேலும் மோசமடையாமல் தணிப்பதற்கு வழிவகுக்கும் வகையில் அச்சட்டங்கள் நிலைநாட்டப்படுதல் வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். பொதுமக்களின் பாதுகாப்பு, சுத்தமான நீர் மற்றும் மருத்துவ சேவைகள் உள்ளிட்ட அத்தியாவசியமான உட்கட்டுமான வசதிகளை வழங்குதல், பணயக் கைதிகளை உடனடியாக விடுவித்தல் மற்றும் மோதல் இடம்பெறும் வலயங்களிலுள்ள மக்கள் வெளியேறுவதற்கு வகை செய்தல் போன்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிலைப்பாட்டினை திருமதி ஷபாஸ் மீள வலியுறுத்தினார்.

இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர், மேதகு சாண்டில் எட்வின் ஷோக் அவர்கள், சர்வதேச மனிதநேய சட்டத்தை நிலைநாட்டத் தவறியமையானது, எவ்விதம் குற்றச் செயல்களை சாதாரணமானதாகவும் சாதாரண நடத்தைகளை குற்றச்செயல்களாகவும் மாற்றியுள்ளதென விபரித்தார்.

காஸாவில் இஸ்ரேலின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு மற்றும் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்படும் நியாயப்படுத்தமுடியாத போர்க்குற்றங்கள் குறித்தும் கவனத்தை ஈர்த்த அவர், "ஆக்கிரமிப்போர் பாதுகாப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளனரா?" எனக் கேள்வி எழுப்பினார். உடனடியான போர்நிறுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்திய உயர்ஸ்தானிகர் ஷோக், 'போர்நிறுத்தம் மற்றும் பொதுமக்கள் வெளிச்செல்வதற்கான பாதுகாப்பு பாதைகளுக்கு ஆதரவாக வாக்களிக்காதவர்கள்' குறித்து விமர்சித்தார். மாறிவரும் உலகளாவிய மக்கள் தொகைக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளாத ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், ஐ.நா தன்னை உருவாக்கிய, வரலாற்று ரீதியாக செல்வாக்கு மிக்க நாடுகளுக்குச் சாதகமாக உள்ளதாக குற்றஞ்சாட்டினார். சர்வதேச மனிதாபிமான சட்டத்தினை நிலைநிறுத்துவதில் பல்தரப்பு நிறுவனங்கள்

தோல்வியடைந்துள்ளமைக்குக் காரணமான அதிகார அரசியல் மற்றும் சரிந்துபோன அதிகார கட்டமைப்புக்களை, வளர்ந்துவரும் நாடுகள் சர்வதேச உறவுகளில் நடைமுறைக்கேற்றதும் ஒத்திசைவானதுமான அணுகுமுறைகள் மூலமாக தகர்த்தெறிய ஆரம்பித்துள்ளதைக் கோடிட்டுக் காட்டினார். இராணுவ வலிமையின் அடிப்படையில் கூட்டணிகள் உருவாக்கப்படுவதை ஏற்றுக்கொண்ட உயர்ஸ்தானிகர், அவற்றை உலகளாவிய ஒழுங்குமுறைக்கு புதிய சவால்களாக முன்வைப்பதுடன், உலகளாவிய பாதுகாப்பிற்கு ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும் என்பதையும் ஒப்புக்கொண்டார். இம்மாதிரியான போக்குகளைக் கட்டுப்படுத்துவதிலும் குறைப்பதிலும் வளர்ந்துவரும் நாடுகள் முக்கியமான பொறுப்பைக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த குழு விவாதமானது; முன்னாள் வெளிநாட்டமைச்சின் செயலாளர் தூதுவர். மேதகு பாலிகக்கார, முன்னாள் விமானப் படை அதிகாரி காகன் புலத்சிங்ஹல, தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் (IINSS) நிறைவேற்றுப் பணிப்பாளர் கேர்ணல் நளீன் ஹேரத், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான குழுவின் துணைத் தலைவர் திரு லார்ஸ் பிரிடால், லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி. டி எல் மெண்டிஸ், வெளிநாட்டுக் கொள்கை ஆய்வாளர் உதித தேவப்பிரிய உட்பட, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சர்வதேச உறவுகள் கற்கைநெறியில் அண்மையில் பட்டம் பெற்றோர் மற்றும் பட்டதாரி மாணவர்கள் என, பார்வையாளர்களாக வந்திருந்த நிபுணர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்புக்களால் மேம்படுத்தப்பட்டது.

பொதுமக்களைப் பாதுகாப்பதில் சர்வதேச சமூகத்தின் செயலற்ற தன்மை, மனிதாபிமான அடிப்படையிலான போர் நிறுத்தத்தின் முக்கியத்துவம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பொறுப்புக்கூறலின் பொருத்தப்பாட்டில் இருவேறு நிலைப்பாடு, பல்தரப்பு நிறுவனங்களில் வளர்ந்துவரும் நாடுகளின் பலம் மற்றும் மோதல் சூழ்நிலைகளில் அரசு சாரா செயற்பாட்டாளர்களால் முறையாக வெளிப்படுத்தப்படும் பங்கு உள்ளிட்ட தலைப்புக்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இந்த கலந்துரையாடலை மேலும் சிறப்பாக்குவதற்காக, மோதல் மற்றும் பிற பிராந்திய பிரச்சனைகளை, ஒருமுகப்படுத்தப்பட்ட புரிதலுடனும் அவசியமான சமகாலப் பிரச்சனைகளை புரிந்துகொள்வதில் உலகளாவிய கண்ணோட்டத்தில் ஈடுபடுவதற்கும் பங்கேற்போரை, குழுவினர் ஊக்கப்படுத்தினர்.